# தூதன்

தூதன்-26 மார்ச் 2017 தூது-3



"ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும்
மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி,
நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்."
2 பேதுரு 3:9

## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| உதவி போதகர் மடல் | 07 |
| உதவி ஆயரம்மா மடல் | 09 |
| செயலர் மடல் | 11 |
| பக்குவம் வந்து திக்குத் திரும்பிய சவுல் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| ஆடு | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| திருச்சபை ஜெபநாள் | 18 |
| வேதவினா போட்டி | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| Health Tips | 24 |
| Children's Corner | 26 |
| Birthday Celebrants | 28 |
| Wedding Anniversary Celebrants | 31 |
| ஆராதனை பாடல்கள் | 32 |
| Background of Solomons First Temple - Book 4 | 35 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com,  E-mail: tamilcsi@eim.ae

## எண்ணெய் பூசும் சாக்கிரமெந்து
## (Sacrament of Anointing the sick)

"உங்களில் யாரேனும் நோயுற்றிருந்தால், திருச்சபையின் மூப்பர்களை அழைத்து வாருங்கள். அவர்கள் ஆண்டவரது பெயரால் அவர்மீது எண்ணெய் பூசி இறைவனிடம் வேண்டுவார்கள்." யாக்கோபு 5:14.

கிறிஸ்துவுக்குள் பிரியமான உடன் விசுவாசிகளே,

மார்ச் மாதம் 1-ம் தேதியிலிருந்து இவ்வாண்டின் தபசு காலங்கள் துவங்குகின்றன. கல்வாரிச் சிலுவையில் துன்பப்பட்டு, தம் ரத்தத்தைச் சிந்தி, நம் காயங்களைக் கட்டி, அகமும் புறமும் குணப்படுத்துகிற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன். திருச்சபை நம் விசுவாசவாழ்வின் அடித்தளம். சபையின் சாக்கிரமெந்துகள் வாழ்வை வளப்படுத்தும் இறைவனின் அருட்கொடைகள். அடிப்படையில் திருச்சபை வாழ்வில் இரண்டு சாக்கிரமெந்துகள் உள்ளன. அவையாவன: திருமுழுக்கு, திருவிருந்து. இவ்விரண்டும் ஆண்டவர் இயேசுபெருமானின் வாழ்வோடு நேரடித் தொடர்புடையவை. இவைதவிர வேறு ஐந்து சாக்கிரமெந்துகளும் உள்ளன. அவையாவன: திடப்படுத்துதல், ஒப்புரவாகுதல், எண்ணெய் பூசுதல்(நோயுற்றவரைக் குணமாக்குதல்), திருமணம் மற்றும் திருப்பொழிவுகள். (The church as the body of Christ has basically two sacraments. Holy Baptism and Holy Communion. But, in the life and the witness of the church, there are five more sacraments to nourish faith and life together. They are : the sacrament of confirmation, the sacrament of reconciliation, the sacrament of anointing the sick, the sacrament of matrimony and the sacrament of holy orders (Ordination).

இம்மடலில் எண்ணெய் பூசிக் குணப்படுத்தும் சாக்கிரமெந்தின் மகத்துவத்தைக் குறித்துச் சற்று காணலாம்.

### திருமறையில் எண்ணெய் (Oil in the Bible):

பொதுவாக எண்ணெய் என்பது, "வழுவழுப்பான, இளக்கும் தன்மை கொண்ட திரவம்" என்று உணரப்படுகிறது. இது அடிப்படையில் உணவாகவும், மருந்தாகவும், எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. (Generally oil is a lubricant liquid basically used for edible, medicinal and energy purposes).

எண்ணெய் இறைவனின் அருட்கொடை. இது நிலத்திற்கு அடியிலிருந்தும், நிலத்திற்கு மேலுள்ள பற்பல உயிர்களிடமிருந்தும் (தாவரம், விலங்கு) கிடைக்கிறது. இன்றைய வாழ்வை எண்ணெய் இன்றி யோசிக்க இயலாது. எகிப்தின் அடிமைத்தனத்தினின்று செழிப்பான நாடான கானான் நாட்டை இஸ்ராயேலருக்கு ஆண்டவர் வழங்கியபோது அதின் எண்ணெய் வளத்தை ஒலிவ மரங்களின் வழியே மிகுதியாக அளிக்கிறார் (உபா.11:14, 32:13), இது இல்லாமை வறுமை மிக்க இறைத் தண்டனையாகவும் (மீகா 6:15, ஆப. 3:17), இதன் மிகுதி மீட்பின் அடையாளமாகவும் (யோவே. 2:19), இறுதிக்கால மகிழ்வின் அடையாளமாகவும்(யோவே.2:19) உணரப் படுகிறது. (Oil is a blessing of God, the sign of fertility and redemption. The lack of oil is a symbol of divine punishment).

மேலும் எண்ணெய் என்பது எக்காலமும் தேவைப்படும் ஓர் உணவு (1 இராஜா.17:14, 2 இராஜா.4:1-7) மட்டுமல்ல, உடலை மணம் வீசச் செய்யும் (ஆமோ.6:6, எஸ்தர் 2:12), உடலுக்கு வலிமையூட்டும் (எசே.16:9), காயங்களைக் குணப்படுத்தும் (ஏசா.1:6, லூக்கா 10:34) தைலமுமாகும். அதுமட்டுமன்றி எண்ணெய் அடிப்படையில் விளக்குகளுக்கு எரி பொருளாயிருந்து ஒளியூட்டும் இறையடையாளமாகவும் விளங்குகிறது (யாத்.27:20, மத்தேயு 25:3-8). (Oil is the food for all seasons, the ointment to give fragrance to the body, the strength to the physique and healing sign of God. It also ignites light in every lamp).

இறைவன் அளித்த எண்ணெய் பாகாலுக்குப் பயன்படுத்தக்கூடாதெனவும் (ஓசி.2:7,8), வெறும் சடங்கிற்காகப் பயன்படுத்தக்கூடாதெனவும் (ஓசி.12:1,2) இஸ்ரவேலர் எச்சரிக்கப்படுகின்றனர். எண்ணெயை தாராள பானபலியாக மட்டும் ஊற்றி விட்டு நீதி மற்றும் அன்பின் வழியில் நடவாமல் போனால் அது இறைவனால் கண்டிக்கப்படுகிறது; உணர்த்தப் படுகிறது (மீகா 6:7,8). எண்ணெய் தரும் வளமையான ஒலிவமரம் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட நீதிமானையும் (சங்.52:8), அம்மரக் கன்றுகள் அவரது பிள்ளைகளின் செழுமையையும் (சங்128:3), எண்ணெயின் (தைலத்தின்) ஒழுகுதல் ஒருமைப்பாட்டின் அடையாளத்தையும் (சங்.133:1,2) சுட்டுகின்றன. (Oil is God's gift and the sacrificial oil should not simply be a virtual sign but a living sign of trustful life in the sight of the Lord).

## எண்ணெய் திருப்பொழிவு (Anointing with oil):

ஒருவரது தலையில் எண்ணெய் ஊற்றுவது என்பது அவருக்கு மகிழ்ச்சியும், இன்பமும், ஆற்றலும் கிடைக்க வாழ்த்துவதாகும் (சங்.23:5, 92:10, லூக்கா 7:46, மத்தேயு 26:7). அரசர்களைத் திருப்பொழிவு செய்வதற்கும் (சங்.23:5,45:7), இறைத்தெரிவான ஆசாரியத் திருப்பொழிவு செய்வதற்கும் (யாத்.28:41, 29:7), நோய்களைக் குணமாக்குவதற்கும் (யாக். 5:14), உண்மையான பக்திப்பொலிவை வெளிப்படுத்துவதற்கும் (மத்தேயு 6:17-18) பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் குணமாக்குதலின் அடையாளமாக எண்ணெய் பூசும் சாக்கிரமெந்து ஆதித்திருச்சபையிலே பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறிகிறோம். (Oil was used to anoint the Kings and Prophets to give them joy, security and strength. It's a divine calling of a person to God's endeavor. Pouring or applying oil on the diseased and on those in the death bed is a sign of healing and hope).

யாக்கோபு 5:14-15ஐத் தழுவி கத்தோலிக்கத் திருச்சபை மற்றும் மற்றும் பல திருச்சபை மரபுகளில் எண்ணெய் பூசி குணமாக்கும் அடையாளச் சாக்கிரமெந்து நிறைவேற்றப்படுகிறது. கொடிய, நோயுற்ற, மரணத் தருவாயிலுள்ள விசுவாசிகளை குருக்கள் அல்லது மூப்பர்கள் சந்தித்து எண்ணெயை அவர் மீதோ அல்லது காயம் மீதோ அல்லது தலையின்மேலோ பூசி அவர்தம் குறைதீர, நோய்தீர வேண்டுவார்கள். மரணத்தருவாயிலிருப்போருக்குச் செய்யப்படுவது (கடைசி எண்ணெய் பூசுதல் (Extreme Unction) எனப்படுகிறது. இதன்படி நோயுற்றவரை கிறிஸ்துவின் பாடுகளோடு தொடர்புபடுத்தி (connecting the sickly with passion of Christ), பெலனையும், அமைதியையும், நம்பிக்கையையும் அவருக்கு ஏற்படுத்தி (Bringing in the sickly the strength, peace and hope), பாவமன்னிப்பை உறுதிப்படுத்தி (Assuring the forgiveness of sins), உடல் மற்றும் மனநலத்தைத் திரும்பக் கொணர்ந்து (restoring the physical and mental health), ஆத்துமாவை மீட்பிற்குள் இணைத்து (preparing the soul for salvation), நிலைவாழ்விற்குள் நுழைய ஆயத்தப்படுத்துவதாகும் (preparing for eternal life). சடங்கிலே மட்டுமல்ல, கிறிஸ்துவைப் பின்பற்றி நீதியுள்ள வாழ்வின் வழியே நாமும் இதைச்செய்து நிறைவேற்றுவோம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.
சபை போதகர்.

## திருச்சபையில் தெரிந்துகொள்ளப்பட்ட பெண்கள்
### (The Elect Ladies in the Church) 2 யோவான் 1:13

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,
தாயும் தந்தையுமாயிருக்கிற கடவுளின் திருநாமத்தில் மார்ச் மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தபசு காலங்களை இம்மாதத்தில் துவங்குகிறோம். மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்படி கடவுள் விரும்புகிறார். அதே நேரத்தில் “அகில உலக பெண்கள் திருநாளையும்” கொண்டாடும்படியாகத் திருச்சபை என்னும் மணவாட்டி அழைக்கப்பட்டுள்ளது. மார்ச் 8-ம் தேதி இச்சிறப்பு நாள் உலகெங்கிலும் சமத்துவத்தின், இணையான படைப்பின், இறைச்சாயலாக திருச்சபையால் நினைவு கூறப்படுவதால் நமது திருச்சபையிலும் இம்மாதத்தின் இரண்டாம் வெள்ளியில் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் மூலமாக சிறப்பு வழிபாடும், ஒடுக்கக்கூட்டமும் நடைபெற உள்ளன. இதற்காக ஜெபிக்கவும், இணைந்து கொண்டாடவும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். அதையொட்டி சபைப் பொறுப்பிலே மற்றும் சாட்சி வாழ்க்கையிலே முன்னோடியாய், தலைவியாய் ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்ட பெண்களைக் குறித்து 2 யோவான் நிருபத்தின் அடிப்படையில் உங்களுடன் சில சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்கிறேன்.

### 1. தெரிந்து கொள்ளப்பட்ட தலைவிகள் (Elect leaders):

திருமறையிலுள்ள சிறிய புத்தகங்கள் பலவற்றை நாம் வாசிப்பது இல்லை. அப்படியே வாசித்தாலும் கூர்ந்து கவனிப்பதில்லை. 2 யோவான் நிருபத்தில் இரண்டு பெண்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட தலைவிகளாகக் குறிப்பிடப்படுகிறார்கள். “தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாள்” (Elect Lady) என்று 2 யோவான் 2-ம் வசனத்திலும், “தெரிந்து கொள்ளப்பட்ட சகோதரி” (Elect sister) என்று 13-ம் வசனத்திலும் யோவான் இரண்டு தலைவிகளைப்பற்றி குறிப்பிடுகிறார். திருச்சபையையே ஒரு பெண்ணாகக் கருதி யோவான் இக்கடிதத்தை எழுதுவதாகவும் பல அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனாலும் முதல் நூற்றாண்டு திருச்சபை ஒன்றை வழிநடத்திய ஒரு அம்மாளையும், ஒரு சகோதரியைப் பற்றியும் இந்த கடிதத்தில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. பெண்கள் சபையின் வழிகாட்டிகளாக இருந்துள்ளார்கள் என்பதையும் நாம் அறிய முடிகிறது. (இப்படி கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டு தலைவிகளாய் விளங்கின எஸ்தர், தெபோராள், மரியாள் போன்ற பல பெண்களை நாம் அறிவோம்).

### 2. முன்மாதிரியான தலைவிகள் (Exemplary Leaders):

2 யோவான் 4-ம் வசனத்தின்படி தங்கள் பிள்ளைகளைச் சத்தியத்திலே நடக்க வைக்கிற முன்மாதிரியான பெண்களாக யோவான் பாராட்டுகிறார். அப்படியானால் அவர்கள் முதலாவது தங்கள் வாழ்க்கையை சத்தியத்திலே நடத்துகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். அதேபோல அவர்கள் தேவ அன்பிற்கு முன்மாதிரியாகவும் விளங்குகிறார்கள் (வசனம் 5) என்பதையும் யோவான் குறிப்பிடுகிறார். அந்த அன்பை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதற்கு இப்பெண்கள் உதவி செய்யவேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார்.

ஆகவே அப்போஸ்தலனாகிய யோவானுக்கு இந்த பெண்களின் பண்பு, விசுவாசம், சத்தியம், அன்பு, ஊழியம் போன்ற அனைத்தும் தெரிந்திருந்தன. இதிலிருந்து பெண்கள் தங்கள் வார்த்தையிலும், நடத்தையிலும், விசுவாசத்திலும் சபைக்கு முன்மாதிரியாக விளங்கினார் என்று அறிகிறோம்.

### 3. செயல்பாட்டின் தலைவிகள் (Active Leaders):

2 யோவான் 8-ம் வசனத்தின்படி தங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல் எச்சரிக்கையாய் இருக்கும்படி யோவான் உபதேசிக்கிறார். இதன்படி இப்பெண்கள் சபையை கிறிஸ்துவின் உபதேசத்திலே நடத்தவும், கள்ள உபதேசத்தை மறுக்கவும் எச்சரிக்கப்படுகிறார்கள் (வச 8-10). அந்நாட்களில் மாத்திரமல்ல இந்நாட்களிலும் கள்ள உபதேசத்தை அடையாளம் காண நாம் அழைக்கப்படுகிறோம். ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் போதனை மற்றும் வாழ்க்கை முறைக்கு எதிரான சுயமேட்டிமை, சுய லாபம், சுய கருத்துக்கள், சமுதாய ஏற்றத்தாழ்வைக் கண்டித்து உணர்த்தாத போதனை போன்ற பல உபதேசங்கள் கள்ள உபதேசங்களாகும். அதற்கு நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மாம்சத்திலே வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர் வஞ்சகரும் அந்திக்கிறிஸ்துவுமாய் இருக்கிறார் (வசனம் 7) என்பதைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் கிறிஸ்துவே கடவுளின் அவதாரம், அவரே முதன்மையானவர், அவரைவிட யாரும் மாம்சத்தில் சிறந்தவர் அல்ல என்பதையும் யோவான் சுட்டிக்காட்டுகிறார்.

### 4. தகுதியுடைய தலைவிகள் (Capable Leaders) :

இன்றும் ஆண்களுக்கு நிகரான தகுதியுடைய தலைவர்களாகப் பெண்கள் கருதப்படுகிறதில்லை. ஆனால், முதல் நூற்றாண்டிலேயே அப்போஸ்தலனாகிய யோவானால் மதிப்புடைய, கனத்திற்குரிய பெண்களாக இவர்கள் கருதப்பட்டார்கள். தங்கள் சபையின் பிள்ளைகளைச் சத்தியத்திலே நடக்கப் பண்ணவும் (வச4), அன்பிலே நிலைத்திருந்து கற்பனைகளின்படி நடக்கச்செய்யவும் (வச 5,6), கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தை வாழ்த்துக்களாய் பகிர்ந்துகொள்ளவும் (வச 11-13) தகுதியுடையவர்களாகப் பெண்கள் கருதப்பட்டனர் என்பதை யோவானின் மூலமாக அறிகிறோம். இன்றும் ஆண்களோடு இணைந்து பெண்களும் சபைத் தலைவிகளாக வழிபாட்டிலே, நிர்வாகத்திலே சிறந்து விளங்குவதைக் காணமுடிகிறது.

ஆகவே அகில உலக பெண்கள் திருநாளைக் கொண்டாடும் இம்மாதத்தில் விண்வெளி ஆராய்ச்சியிலும், அரசு நிர்வாகத்திலும், தொழில்நுட்பத் துறையிலும், காவல்துறையிலும், இராணுவத்திலும், சமூகசேவையிலும் கூட சிறந்து விளங்கும் பெண்மையின் வலிமையை, தலைமையை நாம் அறியமுடிகிறது. உடலளவில் ஆணாகப் பிறந்து பெண் உணர்வுடன் சமூகத்தில் போராடும் திருநங்கையர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. தபசு நாட்களைக் கொண்டாடும் நாம், சிலுவை நாதராம் கிறிஸ்துவின் வாழ்வையும், போதனைகளையும் பின்பற்றுகிறவர்களாய் பெண்களின் பங்களிப்பை திருச்சபையில் எல்லா நிலைகளிலும் நிலைநாட்டுவோம். “மாதர் தமை இழிவு செய்யும் மடைமையைக் கொளுத்துவோம்” என்ற பாரதியின் வரிகளின்படி பெண் சிசு கொலை, பாலியல் பலாத்காரம், சம உரிமை மறுப்பு, அவ மரியாதை போன்ற அவலங்களை எதிர்த்துக் குரல் கொடுப்போம்! பெண்களின் மேம்பாட்டையும் ஏற்படுத்தின ஆண்டவர் இயேசுவின் சாட்சிகளாய் விளங்குவோம்! ஆமென்!!

இறைப்பணியில்,

திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# உதவி போதகர் மடல்

**வாக்குத்தத்த செய்தி**

இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு. (சங்கீதம் 115:9)

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற வல்லமையுடைய நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

நம் வாழ்வின் ஆதாரம் இயேசுகிறிஸ்துதான். வாழ்விலும், தாழ்விலும் அவரே நம் தேவன். வனாந்திரப் பயணத்தில் இஸ்ரவேலர்களிடம் இருந்தது வெள்ளியும், பொன்னும்தான். அது அவர்கள் வாழ்வில் ஆதாரமாக இருக்கவில்லை. வனாந்திரத்தில் அவரே வாழ்வின் ஆதாரமான தண்ணீரும், அப்பமும் இலவசமாக தந்து வழிநடத்தினார். நம்மிடம் என்ன இருக்கின்றதோ அவையெல்லாம் நமக்கு ஆதாரமாக இருப்பதில்லை. வனாந்தரத்திலும், வாக்குத்தத்த தேசத்திலும் அவரே நம் தேவன். அவர் நம் ஆதாரமாய் நம் வாழ்வின் பயணத்தில் இருப்பதற்கு, கர்த்தரை நம்பி அவரைச் சார்ந்துகொள்ள விரும்புகிறார். எதையெல்லாம் நம்பி நாம் பயணிக்க விரும்புகிறார் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம்.

### 1. வார்த்தையை நம்பிய பயணம்:

யோவான் 4:47,52-ல் மரண அவஸ்தையும், ஜுரமும் ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரனைப் பிடித்துக் கொண்டதைக் காண்கிறோம். யோவான் 4:50-ல் ராஜாவின் மனுஷன் இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தையை நம்பிப் போனபோது, அவன் குமாரனைப் பிடித்தது அவனை விட்டுப் போயிற்று. நம் வாழ்வின் பயணத்தில் உதவி செய்வது கர்த்தருடைய வசனமே. அநேக காரியங்கள் நம்மைப் பிடித்துக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறது. அநேக நேரங்களில் நமக்குள் சோர்வு, விசுவாசம், தனித்து விடப்பட்ட நிலை, சமாதானமின்மை, துரத்தப்பட்ட நிலை, தரித்திரம் போன்றவை நம்மைப் பிடித்துக்கொள்ளும்படி வகை தேடுகிறது. இவையெல்லாவற்றினின்றும், இயேசுவின் பாதத்தில் நாம் நம்பி வரும்போது, அவர் தம்முடைய வார்த்தையை அனுப்பி நம்மை விடுவிக்கிறார்.

தாவீதும் தன் அனுபவத்தில், மனிதனைப் பிடித்துக்கொள்ளும் காரியங்களைக் (சங்.10:9b) கூறுகிறார். நம்மைப் பிடித்துக்கொள்ள வலை ஒன்று எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறதை இச்சங்கீதத்தில் காணலாம். ஆனாலும் (சங்.10:16) கர்த்தர் ராஜாவாயிருப்பதால், அவரின் அதிகாரமுள்ள வார்த்தை நம்மை விடுவிக்கும்.

### 2. வல்லமையை நம்பிய பயணம்:

நாம் ஆராதிக்கும் தேவன் சகல வல்லமையுடையவர். அவருக்கு கீழ்ப்பட்டிராதது ஒன்றுமில்லை. அவருடைய வல்லமை, எல்லாரையும் எப்படிப்பட்ட காயங்களினின்றும் குணமாக்கக்கூடியது (லூக்.6:19). அவருடைய வல்லமை பிறவிக் குருடனையும் (யோவான் 9) சுகமாக்கும், ஆச்சரியமான காரியங்களை நடப்பிக்கும், மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயிக்கும், 12 வருட பெரும்பாடுள்ள ஸ்திரீயை சுகமாக்கும்.

இன்றும் நம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், திருச்சபையின் வாழ்விலும் தம் வல்லமையை வெளிப்படுத்தி நம் குழப்பங்கள், போராட்டங்கள், எத்தனை வருட பாடாக இருந்தாலும், அனைத்தையும் தீர்த்து வைப்பதற்குச் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

லூக்கா 6:20-ல் தரித்திரரைப் பாக்கியவான்கள் என இயேசுகிறிஸ்து கூறுகிறார். இந்த தரித்திரர் யார்? அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (லூக்கா 6:13). தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குத் தேவனுடைய ராஜ்ஜியத்தின் வல்லமையை அளிப்பதில் பிரியமுள்ளவராயிருக்கிறார். தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்து வேதத்தில் அநேகக் காரியங்களைக் காணலாம். அவருடைய வல்லமையுள்ள ராஜ்ஜியத்தில் கண்ணீரில்லை. தீங்கு செய்பவர்கள் இல்லை என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அவரோடுகூட இருக்கும்படி தெரிந்து கொண்டவர்களின் வாழ்வில் தேவனுடைய ராஜ்ஜியத்தையே கொடுக்கும்போது மற்றவைகளை அளிப்பது அதிக நிச்சயமல்லவா?

### 3. மகிமையை நம்பிய பயணம்:

யோவான் 11:40-ல் இயேசுகிறிஸ்து தம் மகிமையை வெளிப்படுத்த தம்மை விசுவாசிக்கும்படி மார்த்தாளிடம் கூறுகிறார். நம் வாழ்வின் பிரச்சனைத் தீர்வதற்கே வாய்ப்பில்லை என்ற கட்டத்திற்கு நாம் வந்தாலும், நாம் அவரை விசுவாசிக்கும்படி தேவன் நம்மை எதிர்பார்க்கிறார். பவுலும் தன் அனுபவத்தில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போன கட்டத்திலும், பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தத்திலும் கர்த்தரையே நம்பி பயணித்ததாகக் கூறுகிறார் (2 கொரி.1:8,9). அவ்வாறு விசுவாசித்ததால் தாம் தப்பிப் பிழைத்ததையும் (2 கொரி.1:10) கூறுகிறார். இப்படி நாம் விசுவாசிக்கும்போது, அது எந்தக் கல்லையும் (மரணம்) புரட்டும், பார்வோனின் அரண்மனையானாலும், சூசான் அரண்மனையானாலும் உள்ளே அவருடைய கிரியை விளங்கும்.

யோபுவும் தன் வாழ்வில் அனைத்தையும் இழந்து நஷ்டப்பட்ட நிலையிலும், முறுமுறுப்பில்லாமல், மேன்மையான உயிர்த்தெழுதலின் மகிமையினால் பங்கடைவேன் (யோபு 19:25,26) என விசுவாசித்தார். அப்படியே சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவும் தங்கள் ஜீவனே நஷ்டப்பட்டாலும், மேகம் போன்ற திரளான சாட்சிகளின் கூட்டத்தில் (எபி.12:1) பங்கடையும் மகிமையையே பெரிதாக எண்ணி, ஜீவனுள்ள தேவனையே விசுவாசித்தனர். யாராக இருந்தாலும், எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவர்கள் தேவனுடைய மகிமையைக் காண, அதற்கு வேண்டிய விசுவாசத்தைத் தர வல்லவராயிருக்கிறார் (எபி.12:1). பேதுருவும் தம்மை மறுதலித்தாலும், அவனுடைய விசுவாசம் ஒழிந்து, அவரோடு சேரும் மகிமையை இழந்துவிடக்கூடாதென்று அவனுடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடி வேண்டுதல் செய்தார்.

இம்மாதத்தில் அவருடைய வார்த்தையை, வல்லமையை, மகிமையை நம்பி பயணிப்போம். நம் வாழ்வில் இயேசு கிறிஸ்து நம்மோடு இருப்பதையும், அற்புதங்களையும், அதிசயங்களையும் காண்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

டோரா தேர்வுக்காக ஆயத்தம் செய்துகொண்டிருந்தாள். அவள் 9-வது வகுப்பு படிக்கும் மாணவி. டோரா அம்மாவிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். ஏண்டி டோரா ஜெபம் செய்தாயா? என அம்மா ஜாய் அக்கறையோடு கேட்டார்கள். நான்தான் நன்றாகப் படித்திருக்கிறேனே என டோரா அலட்சியமாகப் பதிலளித்தாள். ஏண்டி நன்றாகப் படித்தால் ஜெபம் செய்ய வேண்டாமா என அம்மா கோபமாகக் கேட்டார்கள்.

நன்றாகப் படிக்காதவர்கள்தான் பாஸ் பண்ணவேண்டும் என்று ஜெபிப்பார்கள் என்று கூறினாள் டோரா. என்னடி குதர்க்கமாகப் பேசுகிறாய்? என்னமோ படிக்காமல் ஜெபம் செய்தால் பாஸ் பண்ணிவிடலாம் என்பதுபோல பேசுகிறாயே? என அம்மா கடிந்துகொண்டார்கள். பிறகு எதற்காக ஜெபிக்கவேண்டும் என்றாள் டோரா. படித்தால் மட்டும் போதுமா, இன்னும் எவ்வளவோ காரியங்கள் இருக்கிறது. பரீட்சை எழுதுவதற்கான நல்ல உடல் நலத்தையும், உடல் பலத்தையும் தேவன் உனக்குக் கொடுக்கவேண்டும். படித்த பாடங்களை நினைவுக்குக் கொண்டுவர உதவவேண்டும் என அம்மா தொடர்ந்து சொன்னதை டோரா கவனிக்காதவள் போல் பள்ளிக்குப் புறப்பட்டாள். ஆண்டவரே, இவளுக்கு நல்ல புத்தியைக் கொடும் என்ன அம்மா ஜாய் ஜெபித்தார்கள்.

தேர்வு துவங்கும் நேரமுமாகிவிட்டது. எல்லாரும் முன்கூட்டியே ஆயத்தமாகி வந்திருந்தார்கள். ஆனால் எப்போதும் முதல் மார்க் எடுக்கும் சற்குணம் இன்னும் வரவில்லை! அவனும், அவன் apartment-ல் இருந்து வரும் அவன் நண்பன் ராஜாவும் சேர்ந்து வருவதுதான் வழக்கம். இன்றோ ராஜா மட்டும் தனியே வந்தான். என்னடா, சற்குணம் எங்கே? அவன் வரவில்லையா? என்றாள் டோரா. அவன் இன்று பள்ளிக்கு வரமாட்டான். நேற்று டியூசன் முடிந்து வீட்டுக்குச் சைக்கிளில் போனபோது ஒரு சிறுபையன் குறுக்கே வந்துவிட்டான். அவனை இடிக்காமல் தள்ளிச்செல்ல முயன்றபோது ஒரு பெரிய கல் தட்டி கீழே விழுந்துவிட்டான். அவன் வலது கை ஒடிந்து மாவுக்கட்டு போடப்பட்டிருக்கிறது என்றான் ராஜா. அதைக்கேட்டபோது டோராவுக்குத் திக்கென்றிருந்தது.

தேர்வு துவங்கும் நேரம் வர தேர்வு துவங்கியது. தேர்வு துவங்கிச் சில மணி நேரத்துக்குள், டீச்சர், டீச்சர் செல்வி மயங்கி விழுந்துவிட்டாள் என சத்தம் கேட்டவுடன் டோரா திரும்பிப் பார்த்தாள். அங்கே நன்றாகப்

படிக்கும் மாணவி செல்வி பெஞ்சில் சாய்ந்து கிடந்தாள்! டீச்சர், அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து, அவளை எழுப்பி, ஏண்டி ராத்திரி ரொம்பநேரம் படித்தாயா? எனக் கேட்டார்கள். அதற்கு அவள் ஆம் என்றாள். அவளால் நிற்கமுடியவில்லை, தலை சுற்றினாள், தடுமாறினாள். சற்றுநேரம் அவளைப் படுக்கவைத்து ஒரு டீயும் வாங்கிக் கொடுத்தார்கள் டீச்சர். நல்ல வேளையாக அரைமணி நேரத்துக்குள்ளாக அவளுக்குச் சரியாகிவிட்டது. தேர்வை எழுதத் தொடர்ந்தாள் செல்வி. இதையெல்லாம் நினைத்துக் கலங்கிப்போன டோரா, நன்றாகத் தெரிந்த பதில்களைக்கூட எழுதுவதற்குத் திணறினாள். அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. ஆண்டவரே என்னை மன்னியும் என மனதுக்குள் ஜெபித்துவிட்டு தொடர்ந்து எழுதினாள்.

தேர்வு முடிந்து வீட்டுக்குப்போன டோரா அம்மாவிடம், அம்மா நீங்கள் சொன்னதுதான் சரி, என நடந்ததையெல்லாம் சொன்னாள். நான் இனி ஜெபித்தபின்தான் பாடம் படிப்பேன் என அறிவித்தாள் டோரா. அது போதாது, என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார் என சங்கீதம் 66:18-ல் வசனம் சொல்கிறது. எனவே நீ முதலில் உன் தவறுகளை இயேசுவிடம் அறிக்கை செய்து அவருடைய மன்னிப்பைக்கேள். அவரை உன் ஆண்டவராக ஏற்றுக்கொள் என அம்மா சுட்டிக்காட்டினார்கள். அப்படியே டோரா முழங்காற்படியிட்டு ஜெபித்தாள். ஆண்டவரிடம் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றாள். அன்றிரவு அவள் ஜெபத்தோடு படிக்க ஆரம்பித்தாள்.

**வேதவாசிப்புப் புகுதி :** இயேசுவின் ஜெபம் மத்தேயு 26:36-46
**மனப்பாட வசனம் :** பிலிப்பியர் 4:6.

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி..பர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையின் செயற்குழு அங்கத்தினர் Mr.J.Alwyn அவர்களின் பெரியப்பாவும், திருநெல்வேலி திருமண்டல முன்னாள் பேராயர் Rt.Rev.Dr.Jeyapaul David அவர்கள் 08–02–2017 அன்றும் நமது சபையின் அங்கத்தினர் Mr.W.P.Jayasingh அவர்களின் மருமகனும் நமது சபையின் அங்கத்தினருமான Mr.Noble Rajaiah அவர்கள் 13–02–2017 அன்றும் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையினால் வருடத்தின் 2 மாதங்களைக் கடந்து 3வது மாதத்தைக் காணச் செய்த என் கர்த்தருக்கு கோடாகோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

பாடகர் குழுவில் புதிதாகச் சேர்ப்பதற்கான குரல் தேர்வு (Audition) செய்யப்பட்டது. தேர்வடைந்த அனைவருக்கும் சபையின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். அவர்கள் ஒழுங்காக பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு கர்த்தருக்குத் துதிப்பாடல் பாட உதவியாய் இருப்பார்கள் என்று நம்புகிறேன். தேர்வுக்கு உதவி செய்த நமது Choir Master Mr.Ranjith Singh அவர்களுக்கும். நடுவர்களாக கலந்துகொண்ட Mr.Sanjeeva Palabathuva & Mrs.Bianca Jones இருவருக்கும் சபையின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவிர்க்கமுடியாத காரணங்களினால் குரல்வளத் தேர்வில் பங்குபெற இயலாதவர்களுக்கு மறுபடியும் ஒரு குரல்வளத் தேர்வு நடத்த முயற்சி எடுக்கப்படும்.

மார்ச் மாதம் 18-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை நடக்க உள்ள VBS-ல் பிள்ளைகள் பங்குபெற்று பயனடைய கேட்டுக்கொள்கிறேன். அதற்காக வாகன வசதி ஒழுங்கு செய்யப்படும். வாகன வசதி தேவைப்படுவோர் கொடுக்கப்பட்ட Form-ஐ பூர்த்தி செய்து Jr.Church ஆசிரியர்களிடம் கொடுக்கவும்.

01-03-2017 முதல் லெந்து நாட்கள் ஆரம்பமாகின்றன. பக்தியுடன் இக்காலங்களைப் பயன்படுத்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். திடப்படுத்தல் வகுப்புகளில் பங்குபெறும் நமது பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

சிங் ரத்னம், செயலர்.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mrs. Buelah Prem | 2697 | Dubai |
| 2 | Mr. M.Armstrong | 2698 | Dubai |
| 3 | Miss Jaffrin Johnson | 2699 | Dubai |
| 4 | Mr. Jebin J | 2700 | Dubai |
| 5 | Mr. Rajesh Amirtham | 2701 | Dubai |
| 6 | Miss Mary Stella Gnanamuthu | 2702 | Dubai |

# பக்குவம் வந்து திக்குத் திரும்பிய சவுல்

எருசலேமில் வெறியும்
தமஸ்குவில் அறிவும்
நிறைவுறும் சவுல்,தினம்
பிரகடனம் தேவநாமம்
கிறிஸ்துவே தேவகுமாரன்
செறிவுறும் சீடபாடம்
முறுமுறுத்த பழமைவாதம்
கொலைவெறிக் கோபாவேசம்

கோட்டைக்குள் சீடருடன்சவுல்
கோட்டைமுன் கொல்வலைக்கும்பல்
நோட்டம்விட்டு இராப்பகல்
நிலைத்திருந்தார் விழித்திருந்தார்
கோட்டைமேல் ஏற்றிவிட்டு
கூடைக்குள் பதுங்கவைத்து
சீடர்கயிற்றால் இறக்கிவிட்டு
தப்புவித்தார் சவுல்உயிர்

எருசலேம் திரும்பியதும்
திருந்தியமனம் வருந்தியதினம்
புரிதலும் அறிதலும்
புதுப்புது பரிணாமம்
நெருங்கினால் சீடர்பக்கம்
ஓடினார் பழையபயம்
விரும்பியதும் வருந்தியதும்
நெருங்கிவந்தது ஒருமுகம்

பர்னபா என்பவன்
புரிந்துபரிந்த புதியவன்
புரியவைத்தான் அப்போஸ்தலரை
அறிந்துகொண்டு சவுல்செயல்
புரட்சிப்புயல் புதுச்சீடரென
பதியவைத்துக் கொண்டனர்
எதிர்வழி திரும்பியது
அதிர்வுஅலை சவுல்மயம் !

ஆதாரம் :அப்போஸ்தலர் 9:22–28
கவிதை எண் : 196
கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். யாக்கோபு 1:19

அமரத்துவம்
வாய்ந்தது பைபிள்.
அற்புதமானது பைபிள்
அழியாதது பைபிள்.
ஆன்மீகத்துக்கு
அழைத்துச்
செல்வது பைபிள்.
அறியாமையும்
ஆணவமும்
அகம்பாவமும்
ஆட்கொண்டவர்
தம் இருண்ட
கண்களை
பைபிள் காட்டும்
ஆன்மீக அறிவால்
ஒளிபெறச் செய்பவர்
கர்த்தரின்
இருப்பிடத்தை
அடையலாம்
இன்பமாய்
வாழலாம்
மனிதகுலம்
சொந்தம் பந்தம்
அண்டை அயலாரென
பல வடிவம் பெறும்.
நெறி கெட்டு ஓடும்
வாழ்வுக்கு-ஒரு
கடிவாளம் போட
வேண்டாமா...
தவறுகள் செய்வது
மனித இயல்புதானே...
மூவகை குணங்கள்
ரணங்கள்போல்
எழும்தானே...
பொழுது முழுவதும்
பழுது வராது வாழ
பைபிள் போதனையை
ஏற்கலாம்தானே...
ஆகையால்
என் பிரியமான
சகோதரரே...
கேள்விக்கணை
தொடுப்பதை
விட்டுவிட்டு
கேட்கும் திறன்
வளர்ப்போமே.
நால்வரிடம்
நல்ல சேதியை
கேட்போமே
கேட்பதில்
நல்லதையே
எடுப்போமே...
இதனால்...
நஷ்டமென்ன...
கஷ்டமென்ன...
நிறைகுடம்
நீர் ததும்பி
ஒலிப்பதில்லை.
கர்த்தரை அறிந்தவர்
அதிகம் பேசுவதில்லை.
பேசுவது
அடக்கமாகவும்
அன்பாகவும்
இருக்கட்டுமே
பொறுமை...
கடலினும் பெரிதென
சொன்னார்கள்
முன்னோர்கள்.
கோபம்...
இல்லையா
பாவம் இல்லை
பழியும் இல்லை
கோபம் வருமெனில்
கடிந்து கொள்வதை
விடிந்தால்
பார்க்கலாமென
விடலாமே...
தாழ்வான
இடத்தில்தானே
தண்ணீர் தேங்கும்.
வீண் வம்பு
விலைக்கு வாங்கி
உயர்வாய்
வாழ்ந்தவருண்டா
பணிவுடன் வாழ்ந்து
கெட்டுப்
போனவருண்டா
பைபிள் தரும்
பட்டயம்
நம் மனப்
பெட்டகத்தில்
வைப்போமே.
பாதை தெரிந்தோமே
பயணம் தொடர்வோமே
பிரபஞ்சம் யாவும்
கர்த்தரின் தேசம்
ஒவ்வொரு
மனிதனின் மனதிலும்
கர்த்தரின் வாசம்.
கர்த்தரே
நமது ஜீவ சுவாசம்.
நம்முள் எழும்
கர்த்தரின் உணர்வே
அவரின் நேசம்.

நீதிமொழிகள் 16:32-ல்
இவை பிரதிபலிக்கிறது.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# ஆடு

மனித வரலாற்றில் துவக்கத்திலிருந்தே மனிதனோடு வாழ்ந்த விலங்கினங்களுள் ஆடும் ஒன்றாகும். மனிதருக்கு மிக மிக பயனுள்ள தாவர உண்ணிப் பாலூட்டி விலங்கு. அவற்றின் பால், முடி, தோல், இறைச்சி ஆகியவற்றிற்காக வளர்க்கப்பட்டு வருகின்றன. பலவகையான இலை, தழைகளை மேய்வதால் வெள்ளாட்டுப்பால் மருத்துவக் குணம் கொண்டது. வேறெந்த விலங்கிலும் அதிகமாக செம்மறி ஆட்டுக் கம்பளியே பயன்படுகிறது. இவைகளில் வெள்ளாட்டைக் கயிற்றில் கட்டிக் கொண்டு மேய்ப்பர். ஏனெனில் இவை அங்கும் இங்கும் பார்த்து நடப்பதால், பசுமையான இலைகளைக் கண்டால் அங்கே ஓடி விடும். அதன் மேய்பனுக்கு தான் அந்த இலை அதற்கு தகுந்ததா அல்லது அங்கு ஆபத்து உள்ளதா என தெரியும். எனவே மேய்ப்பன் ஒரு கோலினால் தகுந்த இடத்திற்கு அதை வழி நடத்துவான். “நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே” (சங்கீதம் 95:7). நாம் ஆடுகள், அவர் மேய்ப்பர். யோவான் 10:11ல் “நானே நல்ல மேய்ப்பன்” என்ற நம் இயேசு கிறிஸ்து, ஆடுகளாகிய நாமும் உலக இச்சைக்கு மதிமயங்கிவிடாமல் எவ்வாறு நடத்துகிறார் என சங்கீதம் 23ல் தாவீது அழகாக கூறுகிறார். “அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து, அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார்”(சங் 23:2). செம்மறி ஆடுகள் மந்தை மந்தையாக மேய்க்கப்படும். இந்த ஆடுகள் மேய்ப்பனின் சத்தத்தை கேட்டு அவன் பின்செல்லும். “ஒருவன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து அவைகளில் ஒன்று காணாமற்போனால் ...தேடித்திரியானோ? கண்டுபிடித்தபின்பு அதைத் தன் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு,... என் ஆட்டைக் கண்டுபிடித்தேன் என்னோடுகூடச் சந்தோஷப்படுங்கள்” (லூக்கா 15:4-6) என அந்த உலகப்பிரகாரமான மேய்ப்பன் சந்தோஷப்படுவது போல, நம் இயேசுவும் அவரின் சத்தம் கேட்காமல் வழிவிலகிப் போன நம்மையும் கண்ணீரோடே தேடுகிறார், “நான் காணாமற்போனதைத் தேடி துரத்துண்டதைத் திரும்பக் கொண்டுவந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி, நசல் கொண்டதைத் திடப்படுத்துவேன்” (எசே. 34:16). நல் மேய்ப்பராய் நம்மைத் தோளில் சுமக்க ஆயத்தமாய் இருக்கிறார். “மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்” (லூக்கா 15:7). வேதாகமத்தில் பலி செலுத்த பழுதற்ற ஆடு பயன்படுத்தப்பட்டது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற, வீட்டிற்கு ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு அதின் இரத்தம் வீட்டு வாசலின் மேல் தெளிக்கப்பட்டது. "நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்" (யாத் 12:23). இயேசுகிறிஸ்துவையும் "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என யோவான் 1:29ல் அறிமுகப்படுத்துகிறார். இயேசுகிறிஸ்துவும், நமது பாவங்களுக்காக ஒரே பலியாகத் தம்மையே செலுத்தி, தம்முடைய சொந்த இரத்தத்தினால் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார் (எபி. 9:12,10:10). நமக்காகத் தம் மாசில்லாத இரத்தத்தைச் சிந்தி இரட்சிப்பை நமக்கு இலவசமாகக் கொடுத்திருக்கிறார். "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்" (1பேதுரு 1:19). ஆம், அவரின் விலையேறப் பெற்ற இரத்தம் நம் மேலும், நம் குடும்பம் மேலும் இருக்கும்போது சத்துரு நம்மை நெருங்க முடியாது. தாவீது சிங்கத்தின் வாயைக் கிழித்து ஆட்டைத் தப்புவித்தது போல, நம்முடைய சத்துருவாகிய சாத்தானைச் சிலுவையில் வெற்றி சிறந்தார். "இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும்,... மத்தியிலே நிற்கக் கண்டேன்" (வெளி. 5:6). "அன்றியும் மனுஷகுமாரன் ... வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள்... செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார்" (மத். 25:31-33). ஆம், நமக்காக ஜீவனை கொடுத்த நல்ல மேய்ப்பனாகிய இயேசுவின் குரலை நாம் அடையாளம் கண்டு செம்மறி ஆடுகளைப் போல எப்போதும் அவர் பின் சென்று, அவர் சித்தம் செய்து, அவரின் வருகையில் நமக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற பரம ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள தேவன் கிருபை செய்வாராக.

காடுகளில் பல நாடுகளில் என் ஜனம் சிதறுண்டு சாகுவதா?
பாடுபட்டேன் அதற்காகவுமே தேடுவோர் யார் என் ஆடுகளை!
மந்தையில் சேரா ஆடுகளே எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே தேடுவோம் வாரீர் திருச்சபையே

இனிதா மோசஸ்

## ஆபிரகாம் - ஈசாக்கு!!!

நாற்பதாவது வயதில் ரெபெக்காளை மணந்த ஈசாக்கு, தனது ஐம்பத்தொன்பதாவது வயதில் பிள்ளையற்றிருந்த தன் மனைவியின் வேண்டுகோளிற்கிணங்க அவளுக்காகத் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்தார். கர்த்தர் அவரின் விண்ணப்பத்தின் சத்தத்தைக்கேட்டு அவர்களுக்கு இரட்டைக்குழந்தைகளைக் கொடுத்தார்.

ஈசாக்கும் அவனுடைய குமாரர்களும் ஆபிரகாமோடு கானானில் வாழ்ந்து வந்தனர். குமாரர்களுக்கு பதினைந்து வயதானபோது அவர்கள் அந்த தேசத்துக் குடிகளுடன் பழக ஆரம்பித்தார்கள். ஏசா ஒரு வஞ்சகனாகவும், திறமையான வேட்டைக்காரனுமாயிருந்தான். ஆனால் யாக்கோபோ ஒரு சிறந்த மனிதனாகவும், நல்ல கூடாரவாசியாகவும், தன் மந்தையை மேய்க்கிறவனாகவும், கடவுளைப் பற்றிய செய்திகளை கேட்கிறவனாகவும், தன் தாய் தந்தையிடமிருந்து கட்டளைகளைப் பெறுகிறவனுமாகத் திகழ்ந்தான்.

ஆபிரகாம் வயதுசென்றபோது, ஈசாக்கு அவரை நோக்கி, “நான் தங்களுடைய ஆண்டவனின் கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டு நடப்பேன். நான் அவைகளை விட்டுவிடாமலும் இருப்பேன்” என்று உறுதியளித்தார். ஆபிரகாம் ஈசாக்கையும் அவர் குமாரரையும் ஆசீர்வதித்தார். ஆபிரகாம் யாக்கோபிற்கு கடவுளுடைய வழிகளை கற்றுக் கொடுத்தார்.

ஏசா யாக்கோபுடைய பதினைந்தாம் வயதில் ஆபிரகாம் தன்னுடைய 175-வது வயதில் மரித்தார். ஈசாக்கும் இஸ்மவேலும் அவரை அடக்கம் செய்தனர். ஆபிரகாம் இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட கானானியர் திரண்டுவந்தனர். பிள்ளைகளாக, ராஜாக்களாக, ராஜபுத்திரராக அடக்கம் செய்த இடத்தில் கூடி வந்தனர். அவர்கள் அனைவரும் ஆபிரகாமிற்காக ஒரு வருடம் துக்கங்கொண்டாடினர்.

ஆபிரகாமின் மரணத்திற்குபின்பு, ஏசா அடிக்கடி காட்டிற்கு வேட்டையாடச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பாபேலின் அரசனாகிய நிம்ரோத்தும் தன்னுடைய ஆட்களுடன் அடிக்கடி காட்டிற்கு வேட்டையாடச் சென்று, பகலின் குளிர்ச்சியான நேரத்தில் காட்டிலே உலாவுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நிம்ரோத் ஏசாவை கவனித்துக்கொண்டே இருந்து, ஒருவித பொறாமையினால் நிறைந்தவனானான். ஒருநாள் ஏசா வேட்டையாடச் சென்ற போது அங்கே நிம்ரோத் தன்னுடைய இரண்டு பேருடன் உலாவுவதை கவனித்தான். அவனுடைய எல்லா பரிவாரங்களும் அவனுடன் காட்டில் ஆங்காங்கே சென்று வேட்டையாடப் பிரிந்து சென்றிருந்தனர். ஏசா தன்னை மறைத்து, காட்டிலே பதுங்கிக்கொண்டான். இதையறியாத நிம்ரோத் தன் இரண்டு ஆட்களுடன் உலாவிக் கொண்டிருந்த போது பதுங்கியிருந்த ஏசா நிம்ரோத்தை தன்னுடைய வாளால் குத்தி அவரது தலையை துண்டித்துப்போட்டான். அவனுடன் இருந்த இரண்டு ஆட்களையும் கொலைசெய்தான். அவர்களது அழுகுரல் கேட்ட மற்ற பரிவாரங்கள் விரைந்து வந்து மரித்துப்போயிருந்த நிம்ரோத்தையும், அவனது இரு ஆட்களையும் கண்டனர். அவர்கள் வருவதைக் கவனித்த ஏசா நிம்ரோத்தின் விலையுயர்ந்த ஆடையை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் தன்னுடைய வீட்டிலே பதுக்கி வைத்தான். அப்போது ஓடிப்போனதினிமித்தமும் காட்டில் நடந்த சண்டையினிமித்தம் ஏசா மிகவும் களைப்படைந்தவனாகவும், சோர்வடைந்தவனாகவும் உயிரற்றவனாக யாக்கோபின் முன்பு வந்தமர்ந்தான்.

யாக்கோபு மிகவும் புத்திசாலித்தனமாக ஏசாவின் பிறப்புரிமையையும், மக்பேலா குகையில் ஏசாவின் பங்கையும், பின்னும் ஏசாவின் எல்லாவற்றையும் அன்றைய தினமே எழுதி சாட்சியொப்பமிட்டு அதை தன்னுடைய கைகளில் எடுத்துக்கொண்டான். நிம்ரோத்தின் மனிதர்கள் அவனை எடுத்து அவனை அவனது நகரத்திலே அடக்கம் செய்தனர். நிம்ரோத் மரிக்கும்போது இருநூற்று பதினைந்து வயதுடையவனாய் இருந்தான். நிம்ரோத் தன் கனவில் கண்டபடியே ஆபிராகாமின் வித்தாகிய ஏசாவினால் மரணமடைந்தான். நிம்ரோத்தின் மரணத்தினால் அவனுடைய இராஜ்ஜியம் பகுக்கப்பட்டு பல ராஜாக்கள் அதை ஆண்டு வந்தனர். நிம்ரோத்தின் மனிதர்கள் அவர்களுக்கு அடிமைகளாக வாழ்ந்து வந்தனர்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## வாழ்த்துகிறோம்

**"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"**

கர்த்தருடைய கிருபையால் டிசம்பர் மாதம் 30-ம் தேதி
பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள
Mr.Y.Kingsly Christhu Rajan & Mrs.Paul Santhiya
இவர்களை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# திருச்சபை ஜெபநாள் 05-03-2017 (ஞாயிறு)

"... என் ராஜாவே, என் தேவனே, என் வேண்டுதலின் சத்தத்தைக் கேட்டருளும்." சங்கீதம் 5:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய ஆண்டைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- கடந்த மாதம் முழுவதும் திருச்சபையின் திருப்பணிகள், ஆராதனைகள் கர்த்தருடைய கிருபையால் சிறப்பாக நடைபெற்றதற்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
